# AN EVALUATION OF ADMINISTRATIVE AND MANAGEMENT PROCEDURES OF PORATHIVUPATTU DIVISIONAL PRE – SCHOOLS:

[1]Mr.K.Raveenthiran, [2]Dr.T.Mukunthan
[1]Bt/Bw/Arasadithivu vigneshwara maha vidyalaya, Kokkaddicholai
[2]Department of Early Childhood and Primary Education, Open University of Sri Lanka
thiyadsha@gmail.com , tmuku@ou.ac.lk

**Abstract**:
The experiences which the children get in their childhood period are based on their Learning and Teaching. Pre-Schools provide the good experiences to the children. The child who did not attend the pre-school faced many challenges in learning at the Primary School. The environment which the sample of children living is developed area. However development influence in the pre-school is a question. The purpose of this study is find the answers for the following questions: What are action taken by the administration and management of the develop the pre-schools? What are the reasons structure of the administration and management are not function in proper way. What is the status of administration and management in the pre - schools? Find the reasons for lack of administration and management of the pre-school. This is a descriptive study. The qualitative method used for analysis the data analysis. The data was collected from Teachers, Organizations. The instructions for this study are questionnaire, observation schedule, and documents. The suggestion for overcome problems given.
**Keywords:** Free school, Free school management, Free school Administation

## ஆய்வு அறிமுகம்

இன்றைய காலகட்ட கற்றல் - கற்பித்தல் சூழலானது தொழிநுட்பத்தினை மையப்படுத்தி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்ற வேளையிலே முன்பள்ளிகளினதும் அவற்றின் செயற்பாடுகளின் மீதும் கவனம் செலுத்தவேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் கற்றலுக்கான அடிப்படைகளை வழங்கின்ற முன்பள்ளிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தின் சீரான போக்கு மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் நோக்குகின்றபோது போரதீவுப் பற்று முன்பள்ளிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் சீரான முறையில்பின்பற்றப்படாத் தன்மையினை அவதானிக்க முடிகின்றது.

ஆய்வு மாதிரியிலே உள்ளடங்குகின்ற முன்பள்ளிகளின் செயற்பாடுகள், கட்டமைப்புக்கள், அமைப்பு முறைகள் செயலொழுங்குகள் முதலான விடயங்களை நோக்குகின்றபோது இம்முன்பள்ளிகளில் பாதுகாப்பான சுற்று வேலிகள், பாதுகாப்பான விளையாட்டு முற்றங்கள் இல்லாதிருப்பதுடன் பொருத்தமான மலசலகூட வசதி இன்மை, நீர் வசதி இன்மை, போன்றனவற்றையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறான கட்டமைப்புக்களைக் கொண்ட முன் பாடசாலைகள் தமக்கான ஒரு நிருவாக மற்றும் முகாமை வரைபை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். முன்பள்ளிகளை நடாத்துகின்ற ஆசிரியர்கள், பெற்றோர் முதலானோர் முன்பள்ளிகள் சார்பாக பொருத்தமான உதவி வழங்குபவர்களை இனங்கண்டு அவர்கள் மூலமாக நிருவாக மற்றும் முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

முன்பள்ளிகளிலே நிருவாக மற்றும் முகாமை சரியான முறையிலே ஒழுங்கமைக்கப்படாமை, முன்பள்ளிகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு இவை பற்றிய தெளிவு இன்மை, முன்னாயத்தங்களற்ற நிலையில் முன்பள்ளிகளை நடாத்துதல், பிள்ளைகளது பாதுகாப்பில் முன்கூட்டியசெயற்பாடுகள் மேற்கொள்ளப் படாமை, அனர்த்த நிலைகள் பற்றியதான முன்னாயத்தங்களோ செயல்நிலைகளோ இல்லாமை போன்ற சவால்களை எடுத்துக்காட்டி அவற்றுக்கான தீர்வாலோசனைகளை முன்வைத்தல் ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வுப் பின்னணி

ஆரம்பப் பாடசாலைக்குக் காலடி வைக்கும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த அனேகமான மாணவர்கள் கற்றலில் நாட்டமின்றி காலம் கடத்தும் நிலைக்கு முன்பள்ளிக் கல்வியின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பின் செம்மைப்படுத்தப்படாத நடைமுறைகளே ஆய்வுக்கான பிரதான பின்னணியைத் தோற்றுவித்துள்ளன. இப்பிரதேச முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களது கல்வித் தரம் அவர்கள் முன்பள்ளிக் கல்விக்கென விசேடமாக பயிற்சிகளைப் பெறாத நிலையும் அவற்றின்பால் முனைப்புக்காட்டாத தன்மையும் அவர்களால் உருவாக்கப்படும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் தடைகளை ஏற்படுத்தும் பிரதான காரணியாகத் திகழ்கின்றது. அரசாலோ அரச சார்பற்ற அமைப்புக்களாலோ, தனியாராலோ இப்பிரதேச முன்பள்ளிகள் அனைத்திலும் அமுல்படுத்தக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட கலைத்திட்ட நடைமுறையொன்று

இல்லாமையும் போரதீவுப்பற்று பிரதேச முன்பள்ளிகளின் சரிவுநிலைக்குக் காரணமாகின்றன. இதனை மூர் (2009) ''ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி'' முன்பள்ளிகளில் வழங்கப்படல் வேண்டும். என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறியலாம்.

விவசாயத்தை மையப்படுத்திய பொருளாதாரமும், நிச்சயமற்ற வருமானமும் பொருளாதார நலிவு நிலையும் இப்பிரதேச முன்பள்ளிகளில் பௌதீகக் கட்டமைப்பை வினைத்திறனாக்குவதில் தடைகளை ஏற்படுத்துகின்றன. முன்பள்ளிக் கட்டமைப்பின் பௌதீக வளப்பற்றாக்குறை சீர் செய்யப்படும் போதே அவற்றால் நிறைவானதும் மகிழ்ச்சிகரமானதுமான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதால் பௌதீக வளத்தின் குறைநிலையும் பிரச்சனையின் மேலெழுச்சிக்குக் காரணமாகும். இவ்விடயத்தை செல்வராசா (2006) '' ஒரு நாட்டின் எதிர்காலச் சிறப்பு அந்த நாட்டின் குழந்தைகளினது விருத்திக்காகச் செய்யப்படும் முதலீட்டில் தங்கியுள்ளது'' என்று குறிப்பிட்டதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

**ஆய்வுக்கான நியாயம்**

ஆய்வுப்பிரதேசம் அதிகஸ்டமான பிரதேசமாக இருப்பதால் இங்கு செயற்படும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வினைத்திறனற்ற கற்பித்தலை மேற்கொள்கின்றனர். இவற்றை முகாமை செய்து வழிப்படுத்த வேண்டியது நிருவகிக்கும் அமைப்புக்களது பொறுப்பும் கடமையுமாகும். அத்துடன் பயிற்சியும் அனுபவமும் அற்ற ஆசிரியர்கள் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படுவதால் அவற்றைத் குறைத்து தகுதியான ஆசிரியர்களைப் பயிற்றுவித்து வழிப்படுத்த வேண்டியது முன்பள்ளி நிருவாகத்தில் முக்கியம் பெறுவதால் அதனை முன்னெடுப்பது அவசியமாகின்றது. முன்பள்ளி ஆசிரிய ஆட்சேர்ப்பின்போது குறைந்த பட்சம் கா.பொ.த உயர்தரம் கற்று சித்திபெற்றோராகவும் முன்பள்ளிக் கற்பித்தல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவர்களையும் தெரிவுசெய்து இணைத்துக் கொள்ளும்போது பிரச்சனையின் செறிவு இழிவளவாக்கப்படும் என்பதால் அவற்றை முறையாக முகாமை செய்ய வேண்டியுள்ளது.

**ஆய்வு நோக்கங்கள்**

1. முன்பள்ளிகளின் நிர்வாக மற்றும் முகாமைத்துவச் செயற்பாட்டை இனங்காணல்.
2. முன்பள்ளிகளின் நிர்வாக மற்றும் முகாமைத்துவத்தை தீர்மானிக்கும் காரணிகளைக் கண்டறிதல்.
3. முன்பள்ளிகளின் நிர்வாக மற்றும் முகாமைத்துவத்தை பகுப்பாய்வு செய்தல்.
4. முன்பள்ளிகளின் நிர்வாக மற்றும் முகாமைத்துவத்தினால் எழும் பிரச்சனைகளை மதிப்பீடு செய்தல்.
5. முன்பள்ளிகளின் பொருத்தமான நிர்வாக மற்றும் முகாமைத்துவத்தை சிபார்சு செய்தல்.

**இலக்கிய மீளாய்வு**

சின்னத்தம்பி (2009) குறிப்பிடுகையில் முகாமைத்துவம் என்பது பொதுவாக, ஒழுங்கமைந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் அடைவதற்கு ஏற்றதாக தமது நிறுவன ஒழுங்கமைப்பையும், வளங்களையும் திட்டமிட்டு, வழிப்படுத்தி, ஒழுங்கமைத்து, மேற்பார்வை செய்து, ஒருங்கிணைத்துக்கொள்ளும் உபாயங்களும் நுட்பங்களுமே முகாமைத்துவம் என்கின்றார்.

(2006) இல் வெளியான சிறுவர் செயலக அறிக்கையின்படி ஒரு முன்பள்ளியானது எவ்வாறு முறையாகவும் வினைத்திறனாகவும் நிருவாகம் செய்யப்பட வேண்டும் என்பதை வெளிக்காட்டுகின்றது. இதன்படி பின்வரும் ஆவணங்கள் இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சேர்வு இடாப்பு, மாணவர் வரவு இடாப்பு, சுகாதார அறிக்கைகள், அவசரத் தேவையின்போது தொடர்புகொள்ள பாதுகாவலர் அல்லது ஏனையோரின் முகவரி, மாணவர் முன்னேற்ற அறிக்கைகள் (பிள்ளைகளின் திறன்கள் விருத்தி உட்பட), பாடசாலைச் செயற்பாட்டு அறிக்கைகள், சம்பவத்திரட்டுப் புத்தகம், பெற்றோர் கல்வி நிகழ்ச்சித்திட்ட விபரங்கள், பெற்றோர் ஆசிரியர் கூட்டறிக்கைகள், நிதி அறிக்கைகள், ஆசிரியரின் தனிப்பட்ட விபரக்கோவை, அறிவித்தல் பலகை, பிள்ளைகளின் விருத்தி பற்றிய தகவல்களைப் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளக் காட்சிப்படுத்தும் பலகை, பாடசாலை விடயங்கள் அல்லது பெற்றோரால் வழங்கக்கூடிய உதவியின் வகை என்பவை தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க ஆலோசனைப் பெட்டி ஒன்று, முகாமைத்துவச் சபையும் அச்சபை ஒழுங்காகக் கூடுதலும், பெற்றோர் ஆசிரியர் மாதாந்தக் கூட்டம்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் சமூகத் தலைமைத்துவம் பற்றிக்குறிப்பிடும் சந்திரசேகரம் (2008) கிராமிய அபிவிருத்திப்பணிகளில் கிராமப்புற ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் ஒரு முக்கிய பங்கினை ஆற்றமுடியும். என்ற கருத்தை வளர்முக நாடுகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அரசாங்கங்களும் உதவிவழங்கும் நிறுவனங்களும் ஏற்றுக் கொள்கின்றன. இவ்வாசிரியர்கள் நாளாந்த கற்பித்தற் பணியுடன் கிராமமப்புற வாழ்க்கை நிலைமைகளை மேம்பாடடையச் செய்யும் முயற்சிகளில் நேரடியாக ஈடுபடமுடியும் என்ற கருத்தைப் பல வளர்முக நாடுகள் ஏற்றுக்கொள்கின்றன என்கிறார். இக்கருத்தானது ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு

மாத்திரமல்ல கிராமங்களில் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மிகவும் பொருத்தமுடைய செயற்பாடாகவே காணப்படுகின்றது.

முன்பள்ளி நிருவாகம் பற்றிக் குறிப்பிடும் சின்னத்தம்பி (2013) முன்பள்ளிகளின் சமுதாய முதன்மையைப் புரிந்து கொள்ளாமல் தாறுமாறாக முன்பள்ளிகளைச் சில தனியார் நிர்வகிக்கின்றனர். இது மிகவும் கவனமாக மழலைகளுக்கு தீய அனுபவங்களையும், முரண்பட்ட உளவியல் நிலைமைகளையும் வழங்குவதாகி விடுகின்றது. குழந்தைகளில் ஏற்படும் தாக்கங்களை பெரிதுபடுத்தாமல் நடாத்தப்படும் மழலைக் கல்வி வியாபார நிலையங்கள் சமுதாய நீதியை - சமுதாயத் தேவையை நிராகரிப்பனவாகி விடுகின்றன. இத்தகைய தீமை செய்யும் முன்பள்ளிகள் மீது ஐம்பதாயிரம் ரூபா வரையில் தண்டப்பணம் விதிப்பதற்குரிய சட்டம் மேல்மாகாண சபையால் உருவாக்கப்பட்டுள்ளதாக விதந்துரைக்கின்றார். உண்மையாகவே எதிர்கால ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் அத்திபாரம் முன்பள்ளிக் கூடங்களிலேயே இடப்படுகின்றது.

பாலர் கல்வி பற்றிக் குறிப்பிடும் Augustine (2015) பாலர் கல்வியானது பெண் ஆசிரியர்களாலேயே வழங்கப்படுவது நல்லது என்று தோணுகின்றது எனவும், குறித்த ஆசிரியர்கள் பாலர்களை கற்பிக்கும் துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் கருதுகின்றார். பாலர் பாடசாலைக் கட்டடம் மற்றும் வகுப்பறைகள் சற்று பெரிதாகவே இருக்க வேண்டும். மாணவர் வாசிப்பதற்குரிய ஏற்பாடுகள் கட்டாயமாக பாடசாலை நிருவாகத்தால் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள் நிருவாகத்தினரால் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்காக குறிப்பிட்ட நாட்டின் கல்வி அமைச்சு, மற்றும் இணைந்த அமைச்சுக்கள் வளங்களை பாடசாலைக்கு கொடுக்க வேண்டும். பாலர்களை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களைப் போல் கல்வியில் உயர்ந்த கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

வகுப்பறைக்கற்றல் நிலையம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடும் அருளானந்தம் (2012) அது கவர்ச்சியான ஒரு பகுதியாகும். அங்கு ஆர்வமூட்டும் கற்றல் சாதனங்கள் பிள்ளைகளை ஈர்ந்து இழுக்கும். பிள்ளைகளின் சிந்தனைக்கும் கற்பனா வளத்துக்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதலும், காரண காரியங்களைப் பகிர்ந்து கொள்ளவும் இடமளித்து உற்சாகமூட்டும் இடமாக அமைந்திருக்கும் என்கிறார்.

வசந்தகுமார் (2000) தனது ஆய்வு முடிவில் முன்பள்ளி முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டுகிறார். முகாமையாளர்களால் காலத்துக்குக் காலம் போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதில்லை, ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக்கள், தூண்டுதல்கள் வழங்கப்படாமை, முகாமையாளர்கள் தொடர்ச்சியாக இருந்து பணியாற்றாமை, முகாமையாளர்கள் முன்பள்ளி தொடர்பான கற்கை நெறிகளையோ, பயிற்சிகளையோ பெற்றிருக்காமை, முகாமையாளரினால் பதிவேடுகள் பேணப்படாமை.

Were (2014) அவர்களின் கருத்துப்படி பாலர் பாடசாலைக்கல்வி என்பது முறைசார்ந்த கல்விக்கான ஒரு நீண்டகாலப் பயணத்துக்கான அத்திபாரம். இந்த அத்திபாரம் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை நிருவாக முகாமைத்துவ பொறுப்பாளர்கள் என பகுதிகள் பல இருந்தாலும் இவை அனைத்தும் ஒருங்கிணைந்த செயற்பாடே பாலர் பாடசாலை மாணவர்களின் வெற்றி. ஆகவே பாடசாலையின் முகாமைத்துவம் பெற்றோரால் சமூகமயப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

முன்பள்ளி நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடரபாகக் குறிப்பிடும் மூர் (2009) முன்பள்ளிக்குச் சென்ற பிள்ளையின் விருத்தி நிலையும் அடைவு மட்டமும் முன்கல்விக்குச் செல்லாத பிள்ளையைவிட மேம்பட்டுக் காணப்படுவதாக (ஆரம்ப வகுப்புக்களிலேனும்) ஆய்வுகள் கூறுவதாகவும், இதனால் முன்பள்ளிகளின் மீதான கவனம் சர்வதேசத்திலும், தேசிய ரீதியிலும் அதிகரித்திருப்பதாகவும் கூறும் அவர், ஆனால் நடைமுறையில் முன்பள்ளிகளை நிருவகிக்கும் முகாமை செய்யும் மட்டங்களில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. நகரம் கிராமம் என்ற நிலைகளிலும் பல்வேறு மட்டங்கள் உளள்ன. இதனால் முன்பள்ளிகளின் தேவை அவசியம் யாவும் கொள்கை சார்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவற்றுக்குரித்தான பண்புசார் விருத்திக்கான கோலங்களை அவை தன்னளவில் கொண்டிருக்கவில்லை அசமத்துவம் நிலவுகின்றன என்கிறார்.

வெற்றிகரமான முன்பள்ளிச் செயற்பாடுகளில் அதனது பௌதீகக் கட்டமைப்பு சிறப்பிடம் வகிப்பதாகக் குறிப்பிடும் லியோ மார்கா ஆச்சிரம வெளியீடு (2000) அதில் கட்டடம், தளபாடங்கள், சுற்றாடல்சார் செயற்பாடுகள், உபகரணங்கள், வகுப்பறையின் உள்ளக ஏற்பாடுகள், கழிவறை வசதி, குடிநீர் வசதி என்பனவும் முக்கிய இடம் வகிப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றது. இந்நிலை தொடர்பாக அவதானித்த ஆய்வாளன் போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் 75% மானவற்றில் பௌதீக வளங்கள் இல்லாத தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

பிள்ளைகளின் சூழல் மற்றும் பௌதீக இடவசதி பற்றிக்குறிப்பிடும் செல்வராசா (2016) பிள்ளைகளின் கூழலும் இடமும் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்கிறார். உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் இப்பாதுகாப்பு அமைய வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். இதனைப் போரதீவுப்பற்று முன்பள்ளிகளால் எந்தளவு நிறைவேற்ற முடிகின்றது என்பதை மேற்படி அவதானிப்பு வெளிப்படுத்துகின்றது.

செல்வராசா (2005) கருத்தப்படி முன்பள்ளிக்கு வரும் குழந்தைகளில் பெரும்பாலானோர் எளிமையான அறிவுறுத்தல்களை விளங்கிக் கொள்கின்றனர். குழந்தைகள் முன்பள்ளிக்கு வருகின்றபோதே பல்வகைத் தன்மை கொண்ட அனுபவங்களையும், அறிவையும் உடன்கொண்டு வருகின்றனர். இவர்கள் செயற்படுவதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை முன்பள்ளிகள் வழங்கிட வேண்டும் என்பதே அவரது கருத்தாகும். இதனை

முன்பள்ளி மாணவர்களின் பூரண விருத்தியை ஏற்படுத்தும் வகையில் முன்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெறவில்லை என அபேவீர (1972) குறிப்பிடுவதையும், பிள்ளைக்காக கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது பிள்ளையின் இயல்பு, பல்வேறு விருத்திக்கான சந்தர்ப்பங்கள் ஆயத்த மட்டங்கள் என்பன பற்றி விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் என மாலனி ஈரியகம (2001) சுட்டுவதையும், பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சியின்றி இருத்தல் பிள்ளை விருத்தியில் பெரும் தாக்கம் செலுத்துவதாக அமையும் என அத்தக்கோரள (1991) குறிப்பிட்டுள்ளதாக புண்ணியமூர்த்தி (2013) தனது ஆய்வில் சுட்டிக்காட்டுவதானது போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தம்மைப்பற்றிய சுயமதிப்பீட்டை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

**ஆய்வு முறைமையியல்**

இவ்வாய்வு முறையில் ஆய்வினை மேற்கொள்வதற்கு தரவுகள் எவ்வாறு பெறப்பட்டன, மாதிரித் தெரிவு எவ்வாறு இடம்பெற்றது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பன தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் இவ்வாய்வு விபரண ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவத்தை இனங்காண்பதற்கும் அவற்றிலிருந்து முடிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இவ்வாய்வு முறை சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

ஆசிரியர்கள், அமைப்புக்கள், பெற்றோர் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள் யாவும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வில் தரவுப்பகுப்பாய்வுக்காக அளவறிசார் மற்றும் பண்பறிசார் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் பண்பறிசார்முறை அதிகளவில் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் பகுப்பாய்வுக்காக கணனி மென் பொருட்களைப் பயன்படுத்தியதன் மூலம் நேர்த்தியானதும் நம்பகம் மிக்கதுமான பகுப்பாய்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆய்வுக் குடித்தொகையும் மாதிரியும்**

ஆய்வுப் பிரதேசமானது 44 முன்பள்ளிகளை உள்ளடக்கியுள்ள போதிலும் தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டு முன்பள்ளிகள் ஆய்வுக்கான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டன.

*Table 1 தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள்*

| இல | முன்பள்ளியின் பெயர் | மாணவர் எண்ணிக்கை | | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பால் |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | | |
| 01 | நெல்லிக்காடு முன்பள்ளி | 10 | 17 | 02 | பெண் |
| 02 | வெல்லாவெளி முன்பள்ளி | 11 | 06 | 02 | பெண் |
| 03 | சஞ்சீவி வேத்துச் சேனை | 06 | 05 | 02 | பெண் |
| 04 | சரஸ்வதி விவேகானந்த புரம் | 04 | 03 | 01 | பெண் |
| 05 | அம்மன்குளம் அம்மன் | 06 | 08 | 02 | பெண் |
| 06 | இளந்தளிர் விளாந்தோட்டம் | 05 | 06 | 02 | பெண் |
| 07 | ரோஜாவனம் முதுரைக்குளம் | 06 | 05 | 01 | பெண் |
| 08 | பலாச்சோலை மண்டூர் | 14 | 16 | 02 | பெண் |
| 09 | விநாயகர் ஆனை கட்டியவெளி | 15 | 22 | 02 | பெண் |
| 10 | மாவடிமுன்மாரி விஸ்ணு | 03 | 05 | 01 | பெண் |
| 11 | சக்தி காக்காச்சிவட்டை | 19 | 15 | 02 | பெண் |
| 12 | றோஸ் தம்பலவத்தை | 15 | 10 | 01 | பெண் |

(மூலம்: பிரதேச செயலகம் போரதீவுப்பற்று வெல்லாவெளி)

**தரவு சேகரித்தல் கருவிகளும் நுட்பங்களும்**

ஆய்வினுடைய வெற்றியானது சேகரிக்கப்படுகின்ற செம்மையான தரவுகளின் வகை மற்றும் தரம் என்பவற்றில் தங்கியுள்ளன. அந்த வகையில்

1. வினாக்கொத்து
2. அவதானம்
3. ஆவணம் ஆகிய கருவிகள் செப்பமாக வடிவமைக்கப்பட்டன.

**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

கற்பித்தல் துணைச் சாதனங்களை ஆற்றல்நிலை மற்றும் பாடக் கலைத் திட்டத்திற்குப் பொருத்தமான வகையில் அமைத்துக் கொள்ளும் பொருட்டு பல்வேறு வழிகளில் தகவல்கள் பெறப்பட்டன இதன்படி அதிபர்களின் ஊடாக அறியக் கூடிய தகவல்களாக பாடசாலைகளில் கற்றல் துணைச்சாதனங்களை ஆசிரியர்கள் நேர்த்தியாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள், முறைகளை கொண்டுள்ளனர்.

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ளடங்கும் முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை இனங்காண்பதற்காக ஆய்வுக்குட்படும் முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் அவற்றை நிருவகிக்கும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களிடமிருந்தும் வினாக்கொத்துக்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் மற்றும் ஆய்வாளனால் குறிப்பிட்ட முன்பள்ளிகள் நேரடி அவதானத்திற்குட்படுத்தி பெறப்பட்ட தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

**ஆசிரியர்கள் மற்றும் நிறுவனங்கள் அமைப்புக்களுக்கான வினாக்கொத்தும் அவதானிப்புப் படிவமும்**

போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளை இனங்காணும் பொருட்டு அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் அவற்றை நிருவகிக்கும் அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வினாக்கொத்து வழங்கி அதன்மூலம் பெறப்பட்ட தகவல்களுடன் குறிப்பிட்ட முன்பள்ளிகள் ஆய்வாளனின் நேரடி அவதானத்திற்குட்படுத்தப்பட்டதன் அடிப்படையில் திரட்டப்பட்ட தகவல்கள் என்பன பகுப்பாக்கம் செய்யப்பட்டு ஆய்வுப் பிரச்சனைக்கான விடைகாண முயற்சிக்கப்படுகின்றது. இதன்பொருட்டு ஆய்வு செய்யப்பட்ட மூன்றாம் ஆய்வு வினாவின் ஒவ்வொரு உப வினாக்களையும் நோக்குமிடத்து

**பௌதீக வளங்கள்**

பௌதீக வளங்கள் தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்களில் 85.71% தினர் போதியளவு பௌதீக வளத்தை முன்பள்ளிகள் கொண்டிருக்கவில்லை. என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் அவர்களில் 14.29% தினர் பௌதீக வளங்கள் முன்பள்ளிகளில் திருப்தியாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். இதே வினாவிற்கு விடையளித்த முன்பள்ளி அமைப்புக்களில் 66.67% த்தினரும் போதியளவு பௌதீக வளங்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு அவர்களில் 33.33% த்தினர் முன்பள்ளிகளின் பௌதீக வளங்கள் மீது திருப்தியடைய முடியாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். இதனை நேரடி அவதானத்திற்கு உட்படுத்திய ஆய்வாளர் 75% மான முன்பள்ளிகளில் போதியளவு பௌதீகவளங்கள் இல்லை என்பதையும் மீதி 25% மான முன்பள்ளிகளில் அவை திருப்தியாக இல்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றனர். எனவே மேற்படி அனைவரது பிரதிபலிப்புக்களிலும் அதிகமானவை போரதீவுப்பற்று முன்பள்ளிகள் போதியளவு பௌதீக வளங்கள் இன்றிச் செயற்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது.

பௌதீக வளங்களின் பூரணத்துவம் அதிகமாக காணப்படும்போதே சிறார்களின் கல்வி நடவடிக்கைகளில் தொய்வுநிலை ஏற்படாது வளர்த்துச் செல்ல முடியும். இந்நிலையில் போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் காணப்படும் பௌதீகவளத் தேவையை இழிவளவாக்க உதவுவது முன்பள்ளிக் கல்வியின்பால் அக்கறை கொண்ட அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். இவற்றை கீழுள்ள உரு 1 காட்டுகின்றது.





*Figure 1 போதியளவான பௌதீக வளங்கள்*

**பொருட்பாதுகாப்பு ஏற்பாடுகள்**

போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் தொடர்பாக திரட்டப்பட்ட மேற்படி தகவல்களின்படி ஆய்வுப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களில் 80.95% த்தினர் முன்பள்ளிகளில் பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுள் இல்லை எனக் குறிப்பிடும் அதேவேளை 14.29% த்தினர் திருப்தியாக இல்லை என்பதையும் மீதி 4.76% த்தினர் முன்பள்ளிகளில் பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் உண்டு என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். அதேவேளை முன்பள்ளிகளை நிருவகிக்கும் அமைப்புக்களில் 50% த்தினர். பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும் மீதி 50% த்தினர் திருப்தியாக இல்லை எனவும் குறிப்பிடுகின்றனர். முன்பள்ளிகளை அவதானித்த ஆய்வாளர் 50% மான முன்பள்ளிகளில் பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும், அவற்றுள் 33.33% மானவற்றுள் திருப்தியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமையையும் சுட்டிக்காட்டுவதோடு ஆய்விற்குட்படும் முன்பள்ளிகளில் 16.66% முன்பள்ளிகளிலேயே பொருட்பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்டுகின்றார். இதன்படி அனைத்துத் தகவல்களின்படியும் பெரும்பாலான முன்பள்ளிகளில் பொருட்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாமையை இனங்காணக்கூடியதாக உள்ளது.

இதனை அவதானித்த ஆய்வாளன் போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் 83.33% மானவற்றில் பொருட்பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் இல்லை மற்றும் திருப்தியாக இல்லை என்பதை வெளிப்படுத்தியள்ளார்.

போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் காணப்படும் சிறார்களுக்கான பௌதீக மற்றும் மனித வளங்கள் போதிய திருப்தி நிலையில் இல்லை. இந்நிலையில் சொற்ப அளவில் காணப்படும் கட்டிடம், தளபாடம் போன்றவற்றைப் பாதுகாப்பாகப் பேணவேண்டியது அனைவரது பொறுப்பும் கடமையுமாகும். பாதுகாப்பான வேலி, கதவு, அலுமாரி என்பவற்றோடு காவலாளி வசதி, கறையான் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு, மின் வசதி, யானைத் தாக்கத்தில் இருந்து பாதகாப்பு, திருடர்களின் அபாயம் என்பவற்றில் இருந்து முன்பள்ளிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது. இவற்றை கீழுள்ள உரு 2 காட்டுகின்றது.





*Figure 2 பொருட்பாதுகாப்புக்கான ஏற்பாடுகள்*

**பிள்ளைகளின் செயற்பாட்டிற்கான பொருத்தமான ஏற்பாடு**

மேற்படி அட்டவணைத் தகவல்களின்படி பிள்ளைகளின் செயற்பாட்டிற்கான பொருத்தமான ஏற்பாடுகள் காணப்படுவதாக 38.10% மான முன்பள்ளி ஆசிரியர்கள் குறிப்பிடும் அதேவேளை அவை திருப்தியாக இல்லை என 47.62% த்தினரும் இல்லை என 14.29% த்தினரும் சுட்டிக்காட்டுகின்றனர். இதே வினாவிற்கு விடையளித்த முன்பள்ளி நிறுவனங்களில் 8.33% த்தினர் செயற்பாட்டிற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் உண்டு எனவும் 91.67% த்தினர் இல்லை மற்றும் திருப்தியாக இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றனர். இதே விடயத்தை நேரடி அவதானத்திற்கு உட்படுத்திய ஆய்வாளர் 75% மான முன்பள்ளிகளில் பிள்ளைகளின் செயற்பாட்டிற்கான பொருத்தமான ஏற்பாடுகள் இல்லை எனவும், 25% மான முன்பள்ளிகளில் அவை திருப்தியாக இல்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றார். இதன்படி அனைவரது கருத்துக்களின்படியும் போரதீவுப்பற்று

முன்பள்ளிகளில் பிள்ளைகளின் செயற்பாட்டிற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் பெருமளவு இல்லாமையும், இருப்பினும் அவை திருப்தியாக இல்லாமையும் தெளிவாகின்றது.

சிறுவர்கள் செயலூக்கம் மிக்கவர்கள் என்பதால் அவர்களது விருப்புக்கேற்ப செயற்படுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும், வளங்களையும் முன்பள்ளிகள் கொண்டிருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும். இதற்கு எதிர்மறையான நிலையிலேயே போரதீவுப்பற்று முன்பள்ளிகள் செயற்பட்டுக் கொண்டிருப்பதால் அவை விருத்தி பெற வேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றன. இவற்றை கீழுள்ள உரு 3 காட்டுகின்றது.





*Figure 3 பிள்ளைகளின் செயற்பாட்டிற்கான பொருத்தமான ஏற்பாடு*

**ஆசிரியர் சுய மதிப்பீட்டு ஆவணம்**

போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான சுயமதிப்பீட்டு ஆவணங்கள் காணப்படுவதாக 28.57% மான முன்பள்ளி ஆசிரியர்களும் 16.66% மான அமைப்புக்களும் வெளிப்படுத்தும் அதேவேளை அவை இல்லை, இருப்பினும் திருப்தியாக இல்லை என்பதை 71.43% முன்பள்ளி ஆசிரியர்களும் 83.33% மான அமைப்புக்களும் வெளிப்படுத்துகின்றன. இதனை நேரடியாக அவதானித்த ஆய்வாளர் 8.33% மான முன்பள்ளியிலேயே ஆசிரியர் சுயமதிப்பீட்டு ஆவணம் பேணப்படுவதாகவும் மீதி 91.67% மான முன்பள்ளிகளில் அவ் ஆவணம் இல்லாமையையும், திருப்தியாகக் காணப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றார். இதன்படி போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் அதிகளவானவற்றில் ஆசிரியர்களுக்கான சுயமதிப்பீட்டு ஆவணங்கள் திருப்தியாக பேணப்படுவில்லை என்பது புலனாகின்றது.

இந்நிலை தொடர்பாக தேடியறிந்த ஆய்வாளன் போரதீவுப்பற்று முன்பள்ளி ஆசிரியர்களில் 91.67% மானோர் சுயமதிப்பீட்டு ஆவணங்கள் இல்லாத நிலையிலும் இருப்பினும் அவை திருப்தியாக இல்லாத நிலையிலும் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியமாகச் சிறார்களின் நலன்கருதி கல்வியில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு தமது கல்வி மற்றும் தொழில்வாண்மை விருத்திக்காகத் தம்மை அர்ப்பணித்துச்

செயற்படும்போதே போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் முன்னேற்றம் காணமுடியும். இவற்றை கீழுள்ள உரு 4 காட்டுகின்றது.





*Figure 4 ஆசிரியர்களுக்கான சுயமதிப்பீட்டு ஆவணம்*

**கலந்துரையாடல்களும் ஆலோசனைகளும்**

ஆய்வுக்கு உட்படுத்திய போரதீவுப்பற்று பிரதேச முன்பள்ளிகளுக்கு நேர்த்தியான முறையில் நிருவாக மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் சிறந்த முன்பள்ளி ஒழுங்கமைப்பினை கட்டியெழுப்புதல் வேண்டும். அத்தோடு நிருவாக மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தாமல் பிள்ளைகளிடம் குறித்த வயதுக்கான மாற்றங்களை கொண்டுவரமுடியாது

ஆசிரியர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நிருவாக, முகாமைத்துவத்தின் தேவையை அறிந்து செயற்படுத்துவதுடன் அவைபற்றிய தெளிவில்லாத முன்பள்ளிகளை அணுகி அவற்றைக் கட்டமைக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதற்கு பிரதேசமட்ட முன்பள்ளித் தொடர்பாடல் கட்டமைப்புமூலம் மேற்கொள்ளலாம்.

முன்பள்ளி வரும் பிள்ளை விருப்புடன் வருகை தரவும் முன்பள்ளிச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளவும் பாடசாலைச் சூழல் கட்டிடங்கள், விளையாட்டு முற்றங்கள் முதலானவை முக்கியமானவையாகக் காணப்படுவதுடன் முன்பள்ளி ஆசிரியை தாயாகச் செயற்படுதல் ஆகியவற்றின் இன்றியமையாமையை அறியச் செய்தல்.

முன்பாடசாலைகள் தமக்கான பொருத்தமான முன்பள்ளிக் கட்டமைப்பை இருக்கும் வளங்களை மையப்படுத்தி ஒழுங்கமைப்பதற்கான அணுகுமுறையை கொண்டிருத்தல் வேண்டும்.

பிள்ளைகளது மகிழ்வுடன் கூடியதான செயற்பாடுகளுக்கு இடம் தரக்கூடிய வகையில் செயற்பாட்டு சூழல் மாற்றியமைக்கப்டுல் வேண்டும். அவ்வாறு மாற்றம் காணும்போது பிள்ளை விருப்புடன் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளும் அத்துடன் சமூகத்தின் ஒத்துளைப்பும் உறுதிப்படுத்தப்படும் போது ஒழுங்கமைப்பு சிறப்புள்ளதாக மாறும்.

**முடிவுகளும் விதந்துரைப்புகளும் : ஆய்வு மூலமான கண்டறிதல்கள்**

போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் காணப்படும் பௌதீகவளப்பற்றாக்குறையால் சிறார்களின் கல்வி நடவடிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டதொன்றாகக் காணப்படுகின்றது. இதனால் ஓரளவு வசதிபடைத்த பெற்றார் தமது பிள்ளைகளை நகர்ப்புற முன்பள்ளிகளில் சேர்ப்பதற்கு விரும்புகின்றனர். எனவே வசதி குறைந்த குடும்பச் சிறார்கள் மென்மேலும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே அவர்கள் ஆர்வமுடன் முன்பள்ளிக்குச் செல்வதில்லை. முன்பள்ளிகளை விரக்தியுடனே சிறுவயதில் உற்றுநோக்குகின்றனர். இதனால் மேற்கொண்டு அவர்களால் கற்பதில் இடர்பாடு எதிர்நோக்கப்படுகின்றது.

மாத்திரமன்றி குறிப்பிட்ட பாடசாலைகளை வழிநடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்களால் அடுத்தநாள் கற்பித்தலைத் திட்டமிடுவதற்கு வேண்டிய பௌதீக வளங்கள் இன்றித் திண்டாடுகின்றனர். பெற்றாரை நாடும்போது ஆசிரியருக்கும் பெற்றாருக்குமிடையேயான உறவில் விரிசல் ஏற்படுகின்றது. எனவே எந்தவொரு பிள்ளையும் முன்பள்ளிகளில் இணைந்து கொள்வதற்கும், தடையற்ற கல்வியைப் பெறுவதற்கும் முக்கியதேவை அப்பள்ளியில் காணப்படும் பௌதீக வளங்களிலேயே தங்கியுள்ளது. இதனால் இப்பாடசாலைகளை முகாமை செய்வோர் பாடசாலையில் காணப்படும் பௌதீக வளப்பற்றாக்குறையினை இயன்றளவு இழிவளவாக்குவதற்கு முயற்சிப்பதோடு அரசு மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பன இதன்பால் தமது கவனத்தைக் குவியப்படுத்தி முன்பள்ளிச் சிறார்களின் கல்விக்கான பௌதீக வளத்தேவையினை நிவர்த்தி செய்யும்போது முன்பள்ளிச் சிறார்களின் கல்வியில் மேம்பாட்டைக் காணமுடியும்.

ஆய்வுப்பிரதேச முன்பள்ளிகளில் அவற்றின் இயங்குநிலைக்குரிய பொருட்கள் போதியளவு காணப்படாத போதிலும் இருக்கும் சொற்ப அளவு பொருட்களையும் பாதுகாப்பதற்கான நடைமுறை போதியளவு மேற்கொள்ளப்படவில்லை. இதனால் ஒவ்வொரு பெற்றாரும் தமது தேவைக்கு முன்பள்ளிப் பொருட்களைப் பயன்படுத்த எந்தவித தயக்கமும் காட்டுவதில்லை. மாத்திரமன்றி பொருட்பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமையால் தருவிக்கப்பட்ட பொருட்கள், பாவனையில் உள்ள பொருட்கள், அழிவடைந்த பொருட்கள், களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் என எந்தவித பதிவையும் அவதானிக்க முடியவில்லை. இதனால் முன்பள்ளிகள் பல்வேறு இடர்நிலையினை எதிர்நோக்குகின்றன.

இதற்காக முன்பள்ளிகளை நிருவகிப்போர் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று மாற்று அடிப்படையில் காவலாளி வசதியை ஏற்படுத்தலாம். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பொருட்பாதுகாப்பு தொடர்பான பயிற்சியை வழங்கி அவற்றை முறையாகப் பதிந்து பராமரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். பொதுச்சொத்துக்களை சுயநல நோக்கோடு பயன்படுத்தி சேதப்படுத்தாது பொதுநோக்கம் கருதி வெளிப்படு தன்மையோடு பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கலாம். பொதுச்சொத்துக்களைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி வீதிநாடகங்களை நடாத்தலாம், பொருட்களை களவாடுவோருக்கு எதிராக பாராபட்சம் பாராது சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஒவ்வொரு பிரஜையினது மனதிலும் முன்பள்ளிச் சிறார்களது பொருட்கள் எமது பொருட்களைப்போன்றது அவற்றைப் பாதுகாக்க வேண்டும் எனும் மனநிலையை ஏற்படுத்தலாம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் சமூக விளிப்புணர்வை ஏற்படுத்தி முன்பள்ளிகளின் பொருட்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும்.

போரதீவுப்பற்று முன்பள்ளிகளில் காணப்படும் வளப்பற்றாக்குறையானது அங்குள்ள சிறார்களின் செயற்பாட்டிற்குப் பெரும் தடையாக அமைந்து காணப்படுகின்றது. செயற்பாட்டறை என்று ஒன்று காணப்படாமையில் இருந்தே இதனை விளங்கிக் கொள்ளமுடியும். நீர் மூலமான செயற்பாடு, களியை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு, மணலில் செய்யும் செயற்பாடு, ஏனைய உபகரணங்களில் செயற்பாடு என எந்தவித செயற்பாட்டிற்கான முன்னாயத்தங்களையும் இங்குள்ள முன்பள்ளிகளில் காணமுடியவில்லை.

இதனால் சிறுவர்களின் பல்வேறு செயற்படு திறன்கள் பாதிக்கப்படுவதோடு அவர்கள் எதிர்காலத்தில் சுய ஆளுமை அற்றவர்களாகவும் கல்வியில் நாட்டமிளந்தும் காணப்படுவர். இதனால் இலங்கையின் கல்வி மூலமான தேசிய குறிக்கோளை அடையச் செய்வதில் அடிமட்டத்திலேயே தடை ஏற்படுகின்றது. இதனை மாற்றியமைப்பதற்குஅனைவரும் முன்வரவேண்டும்.

அதாவது குறிப்பிட்ட முன்பள்ளிகளுக்கு அரசு நிதியீட்டத்தினை வழங்கி அவற்றில் உட்கட்டுமான வசதியை மேம்படுத்துவதோடு அவை சிறார்களின் தேவை கருதி செயற்பாட்டறை, ஓய்வறை, வழிபாட்டறை, உணவு அருந்தும் அறை, விளையாட்டறை என பகுதியாக்கம் செய்யப்பட்டு அவற்றுக்கான உபகரணங்கள் தாராளமாகவும் தொடர் தேர்ச்சியாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு ஆசிரியர்களுக்கு அவற்றைச் செயற்படுத்துவதற்கான பயிற்சியும் முன்திட்டமிடுவதற்கான பயிற்சியும் வழங்கி அவற்றை கிரமமாகச் செயற்படுத்துவதற்கான மனப்பாங்கை ஏற்படுத்தும் போது எதிர்காலத்தில் போரதீவுப்பற்று போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சிறார்களும் தமது திறன்களை வெளிக்கொணர வழிவகை செய்யப்படும் என்பது திண்ணமாகும்.

ஆய்வுப்பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் தம்மைப்பற்றிய சுயமதிப்பீட்டை மேற்கொள்வதன் அவசியத்தை அறிந்திராமையாலும், அவற்றைப் பேணுவதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்காமையாலும், ஆவணங்களை முன்பள்ளிகளில் பாதுகாக்கக்கூடிய சூழல் இல்லாமையினாலும் அவற்றின்மீது கவனம் செலுத்தத் தலைப்படவில்லை, இதனால் ஆசிரியர்கள் தமது ஆற்றலை, ஆளுமையை தாமாகவே மழுங்கடிக்கச் செய்வதோடு ஏனையோரும் அதனை உடனடியாக அறிந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதுவே முன்பள்ளிச் சிறார்களின் முறையான ஆவணப் பேணுகையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகின்றது.

எனவே முன்பள்ளிகளை முகாமை செய்யும் நிறுவனங்களும் அமைப்புக்களும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை ஒழுங்கு செய்யும்போது ஆசிரியர்களுக்கான சுயமதிப்பீட்டு ஆவணப் பேணுகையின் முக்கியத்துவத்தை விளக்குவதோடு அதை எவ்வாறு இற்றைப்படுத்தி முறையாகப் பேணவேண்டும் என்பதில்

பயிற்சியை வழங்கி அதற்கான உபகரணங்களையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வழங்கும்போது ஆசிரியர்கள் அதனைச் செயற்படுத்த முன்வருவர். மேலும் தற்காலத்தில் ஏற்படும் நவீன மாற்றங்களைக் கருத்திற்கொண்டு ஆவணங்களை கணினி மயப்படுத்தி பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை முன்பள்ளி முகாமைகளால் வழங்கப்படும்போது அவை வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கும் என்பது திண்ணமாகும்.

**முடிவு**

இவ்வாய்வின் மூலமாக முன்பள்ளிகளில் காணப்படும் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பாகக் கண்டறியப்பட்டுள்ளது. தரவுகளின் பகுப்பாய்வின் மூலமாக முன்பள்ளிக் கல்விக்குப் பொருத்தமற்ற வகுப்பறைச் சூழல், வளப்பற்றாக்குறையுடன் முன்பள்ளிகள் செயற்படுதல், முறையான வெளியகத் தொடர்புகள் பேணப்படாமை, ஆசிரியரின் சுய மதிப்பீட்டு ஆவணங்கள் பேணப்படாமை, போதிய கண்காணிப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாமை, பெற்றார் விழிப்புணர்வு அற்றிருத்தல், இலத்திரணியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமை, சுகாதார முயையிலான செயற்பாடுகளை பின்பற்றாமை, திடீர் விபத்துக்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலை காணப்படாமை, மாணவர் செயற்பாட்டிற்கான போதியளவானதும் பொருத்தமானதுமான இட ஒதுக்கீடு இன்மை, மாணவர்களதும் ஆசிரியர்களதும் பதிவுகளில் முழுமைத் தன்மை பேணப்படாமை, பொருட்பாதுகாப்பில் இடருறுதன்மை காணப்படுதல், ஆசிரியர் மீது போதிய கவனம் செலுத்தப்படாமை, முன்பள்ளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை போன்றவற்றோடு முன்பள்ளிப் பிள்ளைகளில் அக்கறை காணப்படுவதும் முன்பள்ளிச் செயற்பாடுகளில் முன்னாயத்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளதோடு இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் விதந்துரைப்புக்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது முன்பள்ளிகளை முகாமை செய்வோருக்கும், பெற்றோருக்கும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், அதன் ஆர்வலர்களுக்கும், சமூக நிறுவனங்களுக்கும், எதிர்கால ஆய்வாளர்களுக்கும் பயன்படக் கூடியதாக இருப்பதுடன் முன்பள்ளிகளைச் சிறந்த முறையில் நிருவகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் துணைபுரியுமென்பது ஆய்வாளர்களுடைய எதர்பார்ப்பாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அருளானந்தம், ச., 2012, முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடு, லங்கா புத்தகசாலை, F.L.I. 14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு - 12.
2. ஆரம்பிக்கும் உரிமை, 2006, சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு, Unicef.
3. சந்திரசேகரன், சோ., 2008, ஒப்பியல் கல்வி, குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, கொழும்பு – 12.
4. சின்னத்தம்பி, மா., 2009, பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு – 11.
5. சின்னத்தம்பி, மா., 2009, பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு – 11.
6. சின்னத்தம்பி, மா., 2013, புதிதாகச் சிந்திப்போம் சமுதாயத்திற்கான கல்வி, கரிகண்ணன் பிரிண்டேர்ஸ், இல – 681, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
7. செல்வராஜா, மா., 2016, ஒப்பியற் கல்வி, செல்வராஜா, மட்டக்களப்பு.
8. புண்ணியமூர்த்தி, கி., 2013, முன்பாடசாலைக் கல்வி மட்டக்களப்பு மாவட்டத்தின் தரம் 1 மாணவர்களின் வினையாற்றல்களில் செலுத்தும் செல்வாக்குத் தொடர்பான ஆய்வு, கொழும்பு பல்கலைக் கழகம், கொழும்பு. (பிரசுரிக்கப்பட வில்லை)
9. லியோ மார்கா ஆச்சிரமம், 2000, முன்பள்ளி ஆசிரியர் கையேடு, 121/1, புனித தோமையார் வீதி, பண்டாரவளை.
10. வசந்தகுமார், கு. 2000, திருகோணமலை நகர முன்பள்ளிகளின் பொருத்தப்பாடும், புதிய கல்விச் சீர்திருத்தமும், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
11. ஜெயராமன், தே., 2012, முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம், பவள ரத்ன வெளியீட்டகம், கண்டி.
12. Augustine, Z. M., 2015, Challenges faced by rural primary school teachers in teaching English reading to infant classes in Jojo west cluster schools in Nkayi District, International Journal of Innovation and Applied Studies.
13. Were P. O., 2014, Effects of Teaching and Learning Resources on Pre School Learners Transition to Class One: A Case Study of Rachuonyo South Sub County, Journal of Education and Practice.